புதுச்சேரி அரசு
துணைநிலை ஆளுநர் செயலகம்

**No. LGS/PRO/2021** **29 ஏப்ரல், 2022**

# பத்திரிகை செய்தி

புரட்சிக்கவிஞர் பாவேந்தர் பாரதிதாசனின் 132-வது பிறந்தநாள் விழா புதுச்சேரி அரசு சார்பில் இன்று கொண்டாடப்படுகிறது. அதனை ஒட்டி புதுச்சேரி பாரதி பூங்காவில் உள்ள கவிஞரின் சிலைக்கு மாண்புமிகு துணைநிலை ஆளுநர் டாக்டர். தமிழிசை சௌந்தரராஜன் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

மாண்புமிகு முதலமைச்சர் திரு. ந. ரங்கசாமி, சட்டப்பேரவைத் தலைவர் திரு. ஆர். செல்வம் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், தமிழறிஞர்கள் விழாவில் கலந்து கொண்டனர்.

செய்தியாளர்களிடம் பேசிய துணைநிலை ஆளுநர்,

- புதுச்சேரியில் பாரதியார் பாரதிதாசன் இருவருக்கும் முழு மரியாதை செலுத்தப்படுகிறது. புதுச்சேரியின் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடல் பாரதிதாசன் எழுதியதுதான்.
- பாரதிதாசன் பாடும்பொழுது "தமிழ்த் தெருவில் தமிழ்தான் இல்லை" என்று சொன்னார். அதனால் புதுச்சேரியில் எல்லாப் பெயர்ப" பலகைகளும் தமிழில் இருக்கும்படி பார்த்துக் கொள்வது பாரதிதாசனுக்கு நாம் செலுத்தும் அஞ்சலி, மரியாதை, கடமையாக இருக்கும். அரசு கட்டாயப்படுத்துவதைவிட நாமாக முன்வந்து தமிழ்ப் பெயர்ப் பலகைகளை வைக்க வேண்டும்.
- புதுச்சேரியில் எல்லா இடங்களிலும் வணிக நிறுவனங்களிலும் தமிழ்ப் பெயர்ப் பலகை இருக்க வேண்டும் என்ற குறிப்பை தரவது குறித்து முதலமைச்சருடன் ஆலோசனை செய்து முடிவு எடுக்கப்படும். வீட்டில் குழந்தைகளுக்கு தமிழ்ப் பெயரை வைத்துப் பழகுவோம். தமிழை பாராட்டுவோம் சீராட்டுவோம்.
- புதுச்சேரியில் தமிழ்த்தாய் வாழ்த்துக்கு முதலிடம் தரப்படுகிறது. தமிழ் தாய் வாழ்த்து இல்லாமல் எந்த அரசு நிகழ்ச்சியும் தொடங்கப்படுவது இல்லை.

என்றுகூறினார்.